**OS**.**No**. 250/2017

**PW**1 - லோகநாதன் த/பெ. ரங்கராஜ்

நாள். 27.1.2023

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1-2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1.5.2009 தேதிதிய 3ம் பிரதிவாதி பெயரில் வாடகை ஒப்பந்தம் பத்திரம் பற்றி பிராதிலும் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 8.5.2009 ல் திருப்பூர் தெற்கு வணிக வரி உதவி ஆணையாளருக்கு 3ம் பிரதிவாதி சார்பாக என் மனைவி பெயரில் கோவையில் கிளை அலுவலகம் ஆரம்பமிப்பது தொடர்பாக எனக்கு தெரியும் என்றால் அது பற்றி தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய மனைவியுடையதா என்றால் இல்லை. 8.5.2009 ல் என்னுடைய மனைவி பங்குதாரர் என்றால் ஆமாம். மேற்படி 8.5.2009 தேதிய கடிதத்தைஎன்னுடைய மனைவி தான் அனுப்பியுள்ளார் எனறாலும் நான் தற்போது வழக்கிற்காக அதனை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. 1.5.2009 ல் கோவையில் 3ம் பிரதிவாதியின் கிளை நிறுவனம் ஆரமிப்பபதற்காக என்னுடைய தகப்பனார் ரங்கராஜுடன் ஒரு வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய அப்பா மற்றும் 1ம் பிரதிவாதியுடையதா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படுவது அப்பாவின் இறப்பு சான்றிதழ் என்றால் ஆமாம். 10.4.2017 தேதிய இறப்பு சான்றிதழ் நகல் பி.ச.ஆ 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. சாட்சி தன்னிச்சையாக வாடகை ஒப்பந்த பத்திரத்தில் 2ம் பிரதிவாதி கோவிந்தராஜ் நண்பர் கனேசன் தான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி 1.5.2009 தேதிய வாடகை ஒப்பந்த பத்திரத்தை நான் தான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றாலும் அதனால் தான் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரிகிறது என்றாலும் சரியல்ல.

3. 8.5.2009 தேதிய திருப்பூர் தெற்கு வணிக வரி உதவி ஆணையாளருக்கு விண்ணப்பம் அளித்தபோது அதனுடன் 1.5.2009 தேதிய வாடகை ஒப்பந்த

பத்திரத்தையும் இணைத்து தான் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும அவர்களை சாட்சியாக அழைத்து விசாரித்தால் மேற்படி ஆவணத்தின் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அவருடைய சுயநலத்திற்காக எங்களுடைய முகவரி வைத்து தயார் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை நான் தான் மோசடியாக தயார் செய்து 3ம் பிரதிவாதி பெயரில திருப்பூர் லட்சுமி நகல் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா வங்கியில் மோசடியாக கணக்கு துவங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வாதியும் 1ம் பிரதிவாதயும் தான் அதில் பங்குதாரர்கள்.

4. எனது தகப்பனார் 1992லேயே இறந்து விட்டார் என்றாலும் நான் தான் மோசடியாக அவர் பெயரில் 1.5.2009 தேதிய வாடகை ஒப்பந்த பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அதேபோல் என்னுடைய பெயரில் 5.10.2012 தேதியில் 3ம் பிரதிவாதி நிறுவனம் தொடர்பாக 1ம் வாதி ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி பொது அதிகாரப்பத்திரத்தை bloom knitt finisher என்ற பெயரில் 3ம் பிரதிவாதியுடைய முத்திரியை மோசடியாக பயன்படுத்தி தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களையும் வா.த.சா 1 மற்றும் 2 ஆவணங்களை பயன்படுத்தி bloom knit finishers என்ற பெயரில் திருப்பூர் லட்சுமி நகல் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா வங்கியில் மோசடியாக கணக்கு துவங்கி 3ம் பிரதிவாதியின் கணக்குகளில் மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி விவரம் 1–2 பிரதிவாதிகளுக்கு தெரிய வந்து 2ம் பிரதிவாதி காவல் துறையில் வா.த.சா.ஆ 5–6 ன் கீழ் புகார் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த புகாரின் பேரில் காவல் துறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் 1ம் பிரதிவாதி 7.10.2014 தேதியில் புகார் செய்தார் என்றாலும் அதன் பேரிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பல கட்ட சட்டபோராட்டதிற்கு பின்னர் தான் திருப்பூர் மாநகர குற்ற பிரிவில் குற்ற எண் 7/15 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.7.10.2014 தேதியில் திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான ஆவணங்களை வா.த.சா ஆ 14 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

6. 7.10.2014 தேதியில் புகார் செய்தார் என்றாலும் அதன் பேரிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பல கட்ட சட்டபோராட்டதிற்கு பின்னர் தான் திருப்பூர்

மாநகர குற்ற பிரிவில் குற்ற எண் 7/15 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விசாரணை மேற்கொண்டு முடிக்க்ப்பட்டதை மறைத்து JM2 Court ல் மனு தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு மறைத்து மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் முழுவிவரங்களையும் சொல்லிதான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மத்திய குற்றபிரிவில் என் மனைவிக்கு எதிராகவும் 1ம் பிரதிவாதிக்கு எதிராகவும் 7.7.2016 தேதியில் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டடு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் ஆமாம். Discharge petition தாக்கல் செய்துள்ளேன்.

7. மேற்படி குற்ற பத்திரிக்கையில் நான் 3ம் பிரதிவாதி நிறுவன வங்கிக் கணக்கில் இருந்து ரூ.81,16,461 மோசடி செய்ததாக ஏமாற்றி கூட்டு சதி செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு நானும் என் மனைவியும் 1–2 பிரதிவாதிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை 28/2016 ல் JM2 Court ல் நிலுலையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பொய் புகார் இல்லை உண்மையான புகார் தான். மேற்படி பிரதிவாதிகள் அளித்த வா.த.சா.ஆ 17 ன் கீழான நடவடிக்கையிலிருந்து தப்பிபதற்காக வா.த.சா.ஆ 10 முதல் 14 மற்றும் 16 வரையிலான ஆவணங்களை பொய்யாகவும் மோசடியாகவும் உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. என்னுடைய மனைவி 3ம் பிரதிவாதியின் வங்கிக் கணக்கை நிறுத்தி வைக்க சொல்லி வங்கிக்கு மனு அளித்துள்ளார் என்றால் ஆமாம். 26.12.2013 மற்றும் 5.2.2014 தேதிய கடிதம் பி.த.சா.ஆ 7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் வாதியானவர் 3ம் பிரதிவாதி நிறுவனத்திலிருந்து விழுகுவதாக பி.த.சா 5 மற்றும் 7ன் கீழ் கடிதம் அளித்ததால் 3ம் பிரதிவாதி நிறுவனமானது தனி நிறுவனமாக மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் வெளியில் இருப்பதை பயன்படுத்தி 1–2 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணம் உருவாக்கி தொடர்ந்து க்ம்பெனி நடத்தி வருகிறார்கள். எங்களது சொத்தையும் முதலீடு செய்துள்ளதால் Dept recovery tribunal ல் எங்களது சொத்தின் மீதும நடவடிக்கை எடுத்ததால் ஏழத்துக்கு வந்து விட்டது.

9. நாங்கள் வெளியேறி விட்டதால் தான் 1ம் பிரதிவாதியை வைத்து முதலில் தனிநபர் நிறுவனம் பின்னிட்டு 1–2 பிரதிவாதிகளை வைத்து கூட்டாண்மை நிறுவனமாகவும் செயல்பட தொடங்கியது என்றால் நாங்கள் வெறியேற வில்லை அவர்கள் தான் வெளியேற்றினார்கள். சொத்து ஏழத்திற்கு வந்தபோது நான் எங்களுடைய சொத்தை ஏளத்தில் எடுத்துவிட்டேன் என்றால் சரிய்ல்ல. செட்டில்மெண்ட் மூலமாக எடுத்தேன். எங்களுடைய சொத்து தற்போது என்வசம் உள்ளது என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி வங்கிக் கணக்கில் மோசடி செய்து அதன் மூலம் வ்ந்த பணததில் தான் என்னுடைய சொத்தை மட்டும் பத்திரபபடுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக கொடுத்த 2ம் பிரதிவாதியின் தங்கை சொத்து ஏலத்திற்கு போய்விட்டது என்றால் ஆமாம்.

10. அதேபோல் 2ம் பிரதிவாதியுடைய வீடும் ஏலத்திற்கு போய்விட்டது என்றால் சொத்து செல்லவில்லை கம்பெனி மிஷ்கள் ஏலத்திற்கு வந்து விட்டது. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக கணக்கு வழக்குகளை 2012 வரை மேற்பார்வையில் பார்த்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி நிறுவன பங்குதாரரான 1ம் வாதியின் நடவடிக்கையில் தலையிட்டு அவரை மேற்படி நிறுவன செயல்பாட்டிலிருந்து 1ம் வாதியை தனித்திருக்குமாறு செய்தார் என்று சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. அதேபோல் 2ம் பிரதிவாதி தன்னுடைய பெயரில் ஆரம்பத்த தனி நபர் ஸ்தாபனம் மூலம் 3ம் பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளதும் பொய்யானது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி பி.வா.சா.5ன் மூலம் விலகுவதாக தெரிவித்த பின்னரும், அதை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிவா.சா.5ன் மூலம் கலைக்கப்பட்ட 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான 2009 முதல் 2014 வரைக்கான கணக்கு வழக்குகளை நான்தான் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

11. 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான கணக்கு வழக்குகளையும் வா.த.சா.ஆ.1ஐயும், தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டு இந்த வழக்கிற்காக

மோசடியாக தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. நான் 2014 ல் 3 ம் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து விலகி அது உரிமையாளர் நிறுவனமாக செயல்பட்டு வரும்படியால் 2014 ல் இருந்து 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான கணக்கு வழக்குகளை கோரவும், கணக்கு பேணுனரை நியமிக்க கோரவும் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வாதிகளாக இருந்து தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.470/2018 படி தீர்ப்பளிக்கப்படவேண்டும் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல

**மறு விசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.